**இயக்கூர்தி விபத்துக்கள் கோருரிமை தீர்ப்பாயம், கோபிசெட்டிபாளையம்**

2026 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 25-ம் நாள் திரு.S.இராமச்சந்திரன், B.L., மூன்றாவது கூடுதல் மாவட்ட நீதிபதி அவர்களின் முன்னிலையில் உரிமையியல் நடைமுறைச் சட்டம் மற்றும் விதிகளின் படி உறுதிசெய்யப்படுகிறது.

MCOP.No. 217/2016

**ம.சா. 1**

**திரு. கோகுல் பிரசாத்**

**சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.**

**குறுக்கு விசாரணை ( 2 ம் எதிர்மனுதாரர் தரப்பில்)**

விபத்து 21-06-2016 ல் நடந்தது. நான் யமஹா இருசக்கர வாகனத்தில் கிழக்கிலிருந்து மேற்காக பயணம்செய்தேன் என்றால் சரிதான். விபத்து நடந்த சமயத்தில் ரோட்டின் நடு பகுதியில் டிவைடர் இருந்தது என்றால் இல்லை தற்போதுதான் உள்ளது. ஜேசிபி வாகனம் மேற்கிலிருந்து கிழக்கு நோக்கி வந்தது எவ்வளவு தூரத்தில்நான் பார்த்தேன் என்றால் கண்ணுக்கு எட்டும் தூரத்தில் பார்த்தேன். மேற்படி வாகனமானது வலதுபுறம் திரும்புவதற்காக இன்டிகேட்டர் போட்டு வந்தது என்றால்இல்லை திடீரென்றுதான் திரும்பியது. நான் தான்வேகமாகவும், அஜாக்கிரதையாகவும் வந்து ஜேசிபி வாகனத்தின் மீது மோதி விபத்தை ஏற்படுத்திக்கொண்டேன் என்றால்சரியல்ல. நான் தான் அஜாக்கிரதையாக விபத்தை ஏற்படுத்தினேன் என்றும், ஜேசிபி வாகனத்தின் ஓட்டுநர் அஜாக்கிரதையாக இருக்கவில்லை என்றால்சரியல்ல. எனக்கு இருசக்கர வாகனம் ஓட்ட உரிமம் உள்ளதா என்றால் ஆமாம் அதை நீதிமன்றத்தில் தாக்கல்

செய்யவில்லை என்றால் ஆமாம். விபத்து சமயத்தில் எனக்கு இருசக்கர வாகனம் ஓட்டுவதற்கு உரிமம் இல்லை என்பதால் தான் அதை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. காவல்நிலையத்தில் நான் புகார் கொடுக்கவில்லை என் தகப்பனார் தான் புகார் கொடுத்தார். அடிபட்டவுடன் அபி எஸ்கே மருத்துவமனைக்க சென்றேன். எனக்கு சிகிச்சை அளித்த சிகிச்சை அறிக்கையை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் தவறு. எந்த தேதியில் டிஸ்சார்ஜ் ஆனேன் என்றால் தேதி சரியாக நினைவில்லை. வேறு எந்த மருத்துவமனையில் சிகிச்சை எடுத்துக்கொண்டேன் என்றால்கோவை கேஜி மருத்துவமனையில் ஒருவாரம் சிகிச்சை எடுத்துக்கொண்டேன். ம.சா-ஆ.10 ரசீதுகளுக்குண்டான மருந்து சீட்டுகள் தாக்கல்செய்யவில்லை என்றால் சரிதான். மேற்படி மருந்துகள் அனைத்தும் விபத்தில் எனக்கு ஏற்பட்ட காயங்களுக்காகத்தான் வாங்கப்பட்டது என்று காண்பிக்க ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நீ.ம.சா.ஆ.1 ஆவணத்தில் எனக்கு கால் விரல்கள் அகற்றப்பட்டதாக குறிப்பு எதுவுமில்லை என்றால்மருத்துவ குறிப்பில் உள்ளது நீ.ம.சா-ஆ.1 ஆவணத்தில் இல்லை. நான் விபத்திற்கு பின்னிட்டு கல்லூரி படிப்பை தொடரவில்லை என்று காண்பிக்க ஆவணம் தாக்கல்செய்யவில்லை என்றால் சரிதான். என் தகப்பனார் விவசாயம் செய்து வருகிறார். என் தகப்பனார் பெயரில் பூமி உள்ளது என்றால் குத்தகைக்கு எடுத்து ஓட்டி வருகிறார். எனக்கு வருமான இழப்பு எதுவும் ஏற்படவில்லை என்றும், எனது வருமானத்தை காண்பிக்க ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. விபத்து என்னுடைய அஜாக்கிரதையால் நடந்தது என்பதால் காப்பீட்டு நிறுவனம் எனக்கு இழப்பீடு கொடுக்க

கடமைப்பட்டதல்ல எனவே மனு தள்ளுபடி செய்ய வேண்டும்என்றால் சரியல்ல.

கேட்டுள்ள இழப்பீட்டு தொகை அதிகப்படியானது என்றால் சரியல்ல.